21.03.2024
OP.No.1/2022

ம.சா.1 சாட்சி தியாகராஜன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிர்மனுதாரர் வாடகை கடை 8x9 அதாவது 72 ச.அடி என்றால் சரிதான். தாவா கடையில் எதிர்மனுதார் வெற்றிலை பாக்கு கடை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. காய்கறி கடை வைத்துள்ளார். எத்தனை வருடங்களாக கடை நடத்தி வருகிறார் என்றால் 6 வருடங்களாக கடை நடத்தி வருகிறார். 6 வருடங்களில் எதிர்மனுதார் வாடகை கொடுத்ததற்கோ, நான் பெற்றுக்கொண்டதற்கோ ரசீது எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தாவா கடைக்கு ரூ.7,00,000/- முன் தொகை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். ரூ.7,00,000/- பெற்று ஒத்தி கொடுத்தேனா என்றால் முதலில் ஒத்திக்கு கொடுத்தேன். பின்னர் வாடகைக்கு கொடுத்தேன். ஒத்தி காலம் முடிந்த பிறகு மேற்படி தொகையை முன்தொகையாக வைத்துகொண்டு எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு கொடுத்துள்ளேன்.

மேற்படி ஒத்திக்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஒத்தி எப்போது எழுதப்பட்டது என்றால் 17.08.2016 ம் தேதி எழுதப்பட்டது. ஒத்தி பத்திரத்தின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஒத்தி பத்திரத்தின் நகலை என் வழக்கறிஞரிடம் காட்டினேனா என்றால் காட்டினேன். மேற்படி ஒத்தி பத்திரத்தின் நகல் என்னிடம் உள்ளதா எனது வழக்கறிஞரிடம் உள்ளதா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். ஒத்தி தொகையை எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டேனா என்றால் கொடுத்துவிட்டேன். அதன் பின்னர் மீண்டும் அதே தொகையை முன் பணமாக பெற்றேன். எனது கைவசம்

உள்ள ஒத்தி பத்திரத்தின் நகலில் ஒத்தி தொகையை எதிர்மனுதாரரிடம் கொடுத்த விபரத்தை வரவு வைத்துள்ளேனா என்றால் இல்லை. ஒத்தி தொகையை எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதாக ஒத்தி பத்திரத்தில் எதிர்மனுதாரரிடம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் ஒத்தி தொகையை திருப்பி கொடுக்கவில்லை என்றாலும் தற்போது வரை எதிர்மனுதாரர் ஒத்திதாரராக இருக்கிறார் என்றாலும் ஒத்தி தொகையை திருப்பி செலுத்தி இருந்தால் செல் அடித்திருப்பேன் என்றும் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் என்ற ஒப்பந்தமே இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விபரம் அனைத்தும் எனது மனைவிக்கும் தெரியுமா என்றால் தெரியும். அவரை நீதிமன்றத்தில் விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான்.

ஒத்தி தொகை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 2019ம் ஆண்டு 8வது மாதம் கொடுத்தேன். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். ம.சா.ஆ. 2 ஆவணத்தில் ஏற்கனவே ஒத்திக்கு இருந்த விபரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ 2 ஆவணத்தில் என்ன காரணத்திற்காக வாடகைக்கு கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு கடை வைப்பதற்கு எழுதப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ 2 ஆவணத்தின் படி முன் தொகை ரூ.7,00,000/- என்றும் மாத வாடகை ரூ.3,000/- என்றும் சொன்னால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் அமலுக்கு வந்ததா என்றால் வந்தது. மேற்படி ஒப்பந்த தேதியில் இருந்து ஒரு மாத வாடகையாவது வாங்கினேனா என்றால் ஒரு மாத வாடகை மட்டும் கொடுத்தார். ஒரு மாத வாடகை எவ்வளவு கொடுத்தார் என்றால் ரூ.3,000/- கொடுத்தார். ஒரு மாத வாடகை கொடுத்ததற்கு எழுத்துமூல ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஒரு

மாத வாடகை கொடுத்த விபரத்தை எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். வாடகை ஒப்பந்த தேதி 17.08.2019 என்றாலும் மேற்படி ஒப்பந்தத்தின் படி ஆகஸ்டு மாதத்திற்கு 13 நாட்களுக்கு மட்டுமே வாடகை செலுத்திருக்கவேண்டும் என்றும் ஒரு மாத வாடகை கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும் சரியல்ல. செப்டம்பர் மாத வாடகை கொடுத்தாரா என்றால் ஆகஸ்டு மாதத்திற்கு செப்டம்பரில் கொடுத்தார். செப்டம்பர் மாதத்திற்கு கொடுக்கவில்லை. ஆகஸ்டு மாதத்திற்கு வாடகை கொடுத்ததாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எதிர்மனுதாரர் வாடகை செலுத்தவேண்டிய அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல.

தற்போது எத்தனை வருடங்களாக காய்கறி கடை நடத்தி வருகிறார் என்றால் சுமார் 6 அல்லது 7 வருடங்களாக நடத்தி வருகிறார். ம.சா.ஆ. 2 வாடகை ஒப்பந்தம் நானாக மோசடியாக உற்பத்தி செய்துவந்த வாடகை ஒப்பந்தம் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தை எங்கு வைத்து எழுதினோம் என்றால் பத்திர அலுவலகத்தில் வைத்து எழுதினோம். பத்திர அலுவலகத்தில் யாரை வைத்து எழுதினேன் என்றால் வெங்கடசலம் என்பவரை வைத்து எழுதினேன். எப்போது எழுதினேன் என்றால் 17.08.2019 ம் தேதி எழுதினேன். பத்திர அலுவலகத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நான், எனது மனைவி, தனலெட்சுமி, சேதுமாதவன் மற்றும் வெங்கடசலம் ஆகியோர்கள் சென்றோம். பத்திரம் எழுதுவதற்கு வெங்கடசலத்திற்கு விபரம் சொன்னது யார் என்றால் நான்தான் சொன்னேன். மேற்படி பத்திரத்தை எழுதிய விபரம் எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றாலும் அதில் உள்ள கையெழுத்து எதிர்மனுதாரர் கையெழுத்து இல்லை என்றாலும் சரியல்ல. ஒத்தி பத்திரத்தில் உள்ள எதிர்மனுதாரரின் கையெழுத்தை பார்த்து மோசடியாக மேற்படி

ஆவணத்தில் எதிர்மனுதாரரின் கையொப்பத்தை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடமிருந்து மோசடியாக வாடகை பெறவேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி ம.சா.ஆ. 2 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அவர் அனுப்பிய பதில் அறிவிப்பில் ரூ.7,00,000/– ற்கு மாத வட்டி ரூ.7,000/– என்றும் அதில் வாடகை தொகை ரூ.3,000/–த்தை கழித்து விட்டு மீத தொகையை நான்தான் எதிர்மனுதாரருக்கு செலுத்தவேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் வட்டி பாக்கி ரூ.4,50,000/– என்றும் அசல் தொகை ரூ.7,00,000/–தை சேர்த்து மொத்தம் ரூ.11,50,000/– எதிர்மனுதாரருக்கு நான் செலுத்தவேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என் கைவசம் உள்ள ஒத்தி பத்திரத்தை பார்த்தால் அதில் உள்ள விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருக்கு பணம் செலுத்தவேண்டிய நிலை ஏற்படும் என்பதால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா கடைக்கு அருகே மணிசங்கர் என்பவர் வேஸ்டு பேப்பர் கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். அவரிடமும் ஒத்தி கடன் பெற்றுதான் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அவருக்கும் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதன் பிறகு ஒத்தி பணத்தை நான் அவருக்கு திருப்பி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு அனுப்பியுள்ள அறிவிப்பில் கண்ட விரபங்கள் போலவே அவருக்கும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அவரும் எனக்கு வாடகை ஒப்பந்தம் இல்லை என்றும் ஒத்தி மட்டும் கிரைய ஒப்பந்தம் மட்டுமே போடப்பட்டது என்றும் குறிப்பிட்டு பதில் அறிவிப்பு அனுப்பினார்

என்றால் சரிதான். அவருடைய மகளுக்கு திருமணம் வைத்திருந்ததால் ஒத்தி தொகையை பெற்று சென்றுவிட்டார் என்றால் சரிதான். ரூ.3,00,000/-தை நான் தற்போது வரை கொடுக்கவில்லை என்றாலும் ரூ.4,00,000/- மட்டுமே கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. ரூ.4,00,000/- மட்டுமே முன் பணமாகும். அவருக்கு ஒத்தி கொடுக்கவே இல்லை. மணிசங்கரை விசாரித்தால் எதிர்மனுதாரர் வாடகைக்கு இருந்தாரா ஒத்திக்கு இருந்தாரா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நானும் மணிசங்கரும் ராசியாகிவிட்டோம் என்றால் சரிதான். எனக்கும் அவருக்கும் எந்தவிரோதமும் இல்லை என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் வாடகைதாரர் இல்லை என்றாலும் இந்த மனு சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. நான் சட்டப்படி ஒத்தி தொகையை நீதிமன்றத்தில் செலுத்தி சுவாதினத்தை பெற்றிருக்கவேண்டும் என்றாலும் எதிர்மனுதாரரிடம் பணம் பரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒத்தி தொகை ரூ.7,00,000/- செலுத்தி சுவாதினத்தை எடுக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். இந்த மனுவின் அடிப்படையில் எனக்கு எந்தபரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த மனு சட்டப்படி வனையப்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை பல வழிகளில் அலக்களித்து வருவதால் எதிர்மனுதாரருக்கு நான் செலவுதொகை செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் உதவாது என்றால் சரியல்ல.